**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் திருவிடைமருதூர்**

**மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற உத்தரவு**

ROC.No.814/2020/RG/F1, P.Dis. No.36/2021 Dated 07.04.2021

**ஆண்டுபட்டிகை வழக்கு எண். 117/2024**

**வழக்கின் சுருக்கம்**

| | | | |
|---|---|---|---|
| 1. | எதிரிகள் நீதிமன்ற காவலில் இருந்த காலம் | : | 1 மற்றும் 2 எதிரிகள் 22/09/2013 ம் தேதி காவலுக்குட்படுத்தப்பட்டு, 1 மற்றும் 2 எதிரிகள் 27/09/2013 ம் தேதியன்று பிணையில் சென்றுள்ளனர்.<br>3 வது எதிரி மாண்பமை மதுரை கிளை சென்னை உயர்நீதிமன்ற கு.ப.ம.எண்.18659/2013 ல் 24/10/2013 ம் தேதியிட்ட உத்தரவின் படி முன் பிணை பெற்று, 31/10/2013 ம் தேதியன்று கும்பகோணம் இரண்டாவது கூடுதல் மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் சரணடைந்து பிணையில் சென்றுள்ளார்.<br>4 வது எதிரி 28/09/2013 ம் தேதியன்று காவலுக்குட்படுத்தப்பட்டு, 04/10/2013 ம் தேதியன்று பிணையில் சென்றுள்ளார்.<br>5 வது எதிரி 14/10/2013 ம் தேதியன்று காவலுக்குட்படுத்தப்பட்டு 22/10/2013 ம் தேதியன்று பிணையில் சென்றுள்ளார். |
| 2. | இறுதி அறிக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட நாள் | : | 25/10/2024 |
| 3. | குற்றம் குறித்து கேள்வி கேட்கப்பட்ட நாள் | : | 10/03/2025 |
| 4. | தாக்கல் செய்யப்பட்ட குற்ற பல்வகை மனுக்களின் விவரம் | : | 1. எதிரி மற்றும் நிகழ்நிலை புகார்தாரர் தரப்பில் பிரிவு 359BNSS-ன் படி CMP.No.68/2026 ல் தாக்கல் |

RANGESWARI

Digitally signed by RANGESWARI
Date: 2026.03.23 17:40:19 +0530

| | | | |
|---|---|---|---|
| | | | செய்யப்பட்ட சமாதான மனு 11/03/2026 ம் தேதி தள்ளுபடி. செய்யப்பட்டுள்ளது.<br>2. அரசுத் தரப்பில் கு.ப.ம.எண். 69/2026 ல் கு.வி.மு.ச பிரிவு 311 ன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட மனு 18/03/2026 ம் தேதி அனுமதிக்கப்பட்டது. |
| 5. | அரசு தரப்பு சாட்சிகள் விசாரணை செய்யப்பட்ட நாள் | : | **முதல் விசாரணை** / **குறுக்கு விசாரணை**<br>அ.சா.1 - 11/03/2026 / இல்லை<br>அ.சா.2- 11/03/2026 / இல்லை<br>அ.சா.3- 11/03/2026 / இல்லை<br>அ.சா.4 18/03/2026 / 18/03/2026 |
| 6. | கு.வி.மு.ச பிரிவு 313(1)ஆ குவிமுச கீழ் எதிரிகளிடம் கேள்வி கேட்கப்பட்ட நாள் | : | 18/03/2026 |
| 6<br>7. | எதிரிகள் தரப்பு சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டநாள்: | | இல்லை |
| 8. | தலைமறைவுஎதிரிகள்பற்றியவிவரம் | : | இல்லை |
| 9. | மேல்முறையீட்டுநீதிமன்றத்தால்பிறப்பிக்கபட்ட இடைக்காலதடைஉத்தரவுபற்றியவிவரங்கள் | : | இல்லை |

RANGESWARI

Digitally signed by RANGESWARI
Date: 2026.03.23 17:40:25 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,

திருவிடைமருதூர்.(மு.கூ.பொ.)

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் திருவிடைமருதூர்

முன்னிலை : **திருமதி. P. ரெங்கேஸ்வரி B.Sc., L.L.M.,**

நீதித்துறை நடுவர் எண்.I. கும்பகோணம்.

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் திருவிடைமருதூர் (மு.கூ.பொ),

**2026 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 23 ஆம் நாள் திங்கள் கிழமை**

திருவள்ளுவராண்டு 2056 விசுவாவசு வருடம் பங்குனி-9 ம் நாள்

**ஆண்டுபட்டிகை வழக்கு எண். 177/2024**

**(CNR.No. TNTJ 27002391024)**

| | | |
|---|---|---|
| 1 | வழக்கு எண் | சிசி.எண்.117/2024 |
| 2 | காவல் நிலையத்தின் பெயர்<br>மற்றும் குற்ற எண் | திருப்பனந்தாள் காவல் நிலையம்<br>குற்ற எண். 304/2013 |
| 3 | குற்றமுறையிடுபவர் | காவல் ஆய்வாளர்<br>திருப்பனந்தாள் காவல் நிலையம் |
| 4 | எதிரிகளின் விபரம்<br>பெயர்<br>வயது<br>தந்தையின் பெயர்<br>குடியிருப்பு | 1. ஜெயராமன், வயது 45/2013,<br>த/பெ. சேப்பன்,<br>திருமாந்துறை, திருவிடைமருதூர் தாலுக்கா.<br>2. கணபதி, வயது 59/2013, (இறப்பு)<br>த/பெ. பேச்சிமுத்து,<br>3. ராஜா, வயது 28/2013,<br>த/பெ. சின்னையன்,<br>4. கண்ணன், வயது 45/2013,<br>த/பெ. சின்னையன்,<br>5. ரமேஷ், வயது 32/2013,<br>த/பெ. குஞ்சு,<br>1 முதல் 5 எதிரிகள் வசிப்பது<br>திருமாந்துறை, திருவிடைமருதூர் தாலுக்கா. |
| 5 | தேதி நாள்<br>சம்பவம் | 20/09/2013 |
| 6 | முறையீடு | 21/09/2013 |

RANGESWARI Digitally signed by RANGESWARI Date: 2026.03.23 17:40:30 +0530

| | | |
|---|---|---|
| 7 | கைது | 1 மற்றும் 2 எதிரிகள் 22/09/2013 ம் தேதி கைது.<br>3 வது எதிரி கைது இல்லை.<br>4 வது எதிரி 28/09/2013 ம் தேதி கைது<br>5 வது எதிரி 14/10/2013 ம் தேதி கைது |
| 8 | பிணையில் விடுவித்தல் | 1 மற்றும் 2 எதிரிகள் 27/09/2013 ம் தேதியன்று பிணையில் சென்றுள்ளனர்.<br>3 வது எதிரி மாண்பமை மதுரை கிளை சென்னை உயர்நீதிமன்ற கு.ப.ம.எண்.18659/2013 ல் 24/10/2013 ம் தேதியிட்ட உத்தரவின் படி முன் பிணை பெற்று, 31/10/2013 ம் தேதியன்று கும்பகோணம் இரண்டாவது கூடுதல் மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் சரணடைந்து பிணையில் சென்றுள்ளார்.<br>4 வது எதிரி 04/10/2013 ம் தேதியன்று பிணையில் சென்றுள்ளார்.<br>5 வது எதிரி 22/10/2013 ம் தேதியன்று பிணையில் சென்றுள்ளார். |
| 9 | விசாரணை துவக்கம் | 11/03/2026 |
| 10 | விசாரணை முடிவு | 18/03/2026 |
| 11 | தண்டனை அல்லது உத்தரவு | முடிவாக, இவ்வழக்கில் 1, 3, 4, 5 எதிரிகள் 148, 448, 294(பி), 506(ii) இதசவின் கீழ் குற்றவாளிகள் இல்லை என்று முடிவு செய்து எதிரிகளை கு.வி.மு.சபிரிவு 248(1)-ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது. 2 வது எதிரி கணபதி குற்றச்சாட்டு வனைவதற்கு முன்பு இறந்துவிட்டார். எனவே அவருக்கு எதிரான குற்றச்சாட்டு அற்று போய் விட்டது. |
| 12 | தீர்ப்புரை நகலை வழங்குவது அல்லது குற்றம் சாட்டப்பட்டவர் மீதான காண் முடிவு | -- |
| 13 | கால தாமததிற்கான விளக்கம் | அரசுத்தரப்பு சாட்சிகளை விசாரிக்க காலதாமதம் |

RANGESWARI

Digitally signed by RANGESWARI
Date: 2026.03.23 17:40:38 +0530

இவ்வழக்கானது 28/10/2024 அன்று இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு 18/03/2026 அன்று இறுதியான விசாரணைக்கு வந்தபோது அரசுக்காக அரசு உதவி குற்றத்துறை வழக்கறிஞர் நிலை-I **திரு.I.பாண்டியராஜன்**,B.SC.,B.L.,MBA., அவர்கள் முன்னிலையாகியும், எதிரிகளுக்காக கற்றறிந்த வழக்கறிஞர் **திரு.R.மாதவன்**,B.Com.,B.L., அவர்களும் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்களைக் கேட்டும், சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.

**தீர்ப்புரை**

2. **அரசுத்தரப்பு வழக்கின் சுருக்கம்**:-

கடந்த 20/03/2013 ம் தேதி காலை 09.00 மணிக்கு இவ்வழக்கின் திருமாந்துறை, வெள்ளத்தெரு, காலவாய் கொட்டகையில் பட்டியல் சாட்சி-1 கருணாநிதி என்பவர் இருந்தபோது, திருமாந்துறையை சேர்ந்த 1 முதல் 5 எதிரிகள் ஒன்று கூடி வீச்சருவாள், கட்டையுடன் அத்துமீறி காலவாய் கொட்டகையில் நுழைந்தும், அந்த இடத்தைவிட்டு ஓடிபோடா தேவடியா மகனே என திட்டியும், இந்த இடத்தை விட்டு காலி செய்யவில்லை என்றால் உன்னை கொலை செய்து விடுவேன் என மிரட்டல் விடுத்தும் குற்றம் புரிந்துள்ளார்கள். எனவே 1 முதல் 5 எதிரிகள் மீது 147, 148, 448, 294(பி), 506(ii) இதசவின் கீழ் திருப்பனந்தாள் காவல் ஆய்வாளர் குற்றயிறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

3. வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்டு, எதிரிகளுக்கு அழைப்பாணை அனுப்பி எதிரிகள் நீதிமன்றத்தில் முன்னிலையானபோது, எதிரிகளுக்கு கு.வி.மு.ச. பிரிவு 207-ன் படி வழக்கு ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் இலவசமாக வழங்கப்பட்டது. எதிரிகளுக்கு போதிய வாய்ப்பும், சந்தர்ப்பமும் அளிக்கப்பட்டது.

RANGESWARI Digitally signed by RANGESWARI Date: 2026.03.23 17:40:44 +0530

**4. குற்றச்சாட்டு:-**

அரசுத்தரப்பில் முன் வைக்கப்பட்டுள்ள முகாந்திரங்கள் எதிரிகள் குற்றம் புரிந்திருப்பார் என கருதவும், கருத்தில் கொண்டு செயலாற்றவும் வழிவகுப்பனவாக தெரிந்தமையால், 1, 3, 4, 5 எதிரிகள் மீது 148, 448, 294(பி), 506(ii) இதசவின் கீழ் குற்றச்சாட்டு வனைந்து எதிரிகளுக்கு படித்துக்காட்டி, விளக்கிக் கூறி வினவியபோது எதிரிகள் குற்றத்தை மறுத்து தான் குற்றவாளிகள் இல்லை என்று கூறினார்கள். எனவே வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. 2வது எதிரி கணபதி குற்றச்சாட்டு வனைவதற்கு முன்பு இறந்துவிட்டார். எனவே அவருக்கு எதிரான குற்றச்சாட்டு அற்று போய் விட்டது.

5. இவ்வழக்கில் அரசுத்தரப்பில் 1 முதல் 10 வரையிலான சாட்சிகள் பட்டியலிடப்பட்டு, அ.சா.1 முதல் அ.சா.4 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.5 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிரிகள் தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை.

6. எதிரிகள் மற்றும் நிகழ்நிலை புகார்தாரர் தரப்பில் பிரிவு 359BNSS-ன் படி CMP.No.1075/2026 ல் சமரச மனு தாக்கல் செய்யப்பட்டது. இந்திய தண்டனை சட்டப்பிரிவு 294(b)-ன் படியான குற்றம் சமரசம் செய்து கொள்ள முடியாத குற்றம் என்பதால் மேற்படி மனு தள்ளுபடி செய்யப்பட்டது.

RANGESWARI Digitally signed by RANGESWARI Date: 2026.03.23 17:40:50 +0530

**7. அரசுத்தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து தெரியவரும் அரசுத்தரப்பு வழக்கின் சுருக்கம்:-**

வழக்கு சம்பவம் குறித்து அ.சா.1 கருணாநிதி, த/பெ. கணேஷ் கடந்த 21/09/2023 ம் தேதியன்று திருப்பனந்தாள் காவல் நிலைய சிறப்பு உதவி ஆய்வாளர் பட்டியல் சாட்சி-9 குழந்தைவேல் என்பவரிடம் புகார் மனுவைப் பெற்று நிலைய குற்ற எண்.304/2013-ல் சட்டப்பிரிவுகள் 147, 148, 448, 294(பி), 506(ii) இதசவின் கீழ் வழக்கு பதிவு செய்து அ.சா.ஆ.3 அச்சு முதல் தகவல் அறிக்கை தயார் செய்துள்ளார். புகார் மனு அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. பின்னர் வழக்கினை புலன் விசாரணைக்கு காவல் ஆய்வாளர் பட்டியல் சாட்சி-10 கணபதி என்பவரின் பார்வைக்கு வைத்துள்ளார். ஆய்வாளர் வழக்கினை புலன் விசாரணைக்கு எடுத்துக் கொண்டு 22/09/2013 ம் தேதி காலை 07.00 மணிக்கு சமபவ இடம் சென்று பட்டியல் சாட்சி-7 கணேஷ் மற்றும் பட்டியல் சாட்சி-8 தனராஜன் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு அ.சா.ஆ.4 பார்வை மகஜர் மற்றும் அ.சா.ஆ.5 மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். வழக்கு சம்பவத்தை கண்ணுற்ற சாட்சிகளாக அ.சா.2 கருணாநிதி, த/பெ.பன்னீர்செல்வம், அ.சா.3 செல்வக்குமார் ஆகியோர்கள் விசாரிக்கப்பட்டுள்ளனர். வழக்கு சம்பவம் உண்மை என்பது தெரிய வந்ததால் எதிரிகளை கைது செய்ய தேடியபோது, இந்த வழக்கின் 1வது எதிரி ஜெயராமன், 2 வது எதிரி கணபதி ஆகிய இருவரையும் 22/09/2013 ம் தேதி 04.00 மணிக்கு மணலூர் பஸ்டாப் அருகில் நின்றிருந்தவர்களை தக்க காரணம் கூறி கைது செய்து நிலையம் வந்து தக்க வழி காவல் மூலம் நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்துள்ளார். இந்த வழக்கின் 4 வது எதிரி கண்ணன் என்பவரை 28/09/2013 ம் தேதி மாலை 07.00 மணிக்கு மணலூர் பஸ்டாப் அருகில் நின்றிருந்தவரை தக்க காரணம் கூறி கைது செய்து நிலையம் வந்து தக்க வழி காவல் மூலம்

RANGESWARI
Digitally signed by RANGESWARI
Date: 2026.03.23 17:40:57 +0530

நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்துள்ளார். இந்த வழக்கின் 5 வது எதிரி ரமேஷ் என்பவரை 14.10.2013 ம் தேதி பகல் 12.00 மணிக்கு திருமாந்துறை கோணமதகு அருகே நின்றிருந்தவர்களை தக்க காரணம் கூறி கைது செய்து நிலையம் வந்து தக்க வழி காவல் மூலம் நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்துள்ளார். இந்த வழக்கின் 3 வது எதிரி ராஜா என்பவர் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் முன்பிணை பெற்றதால் கைது நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. இறுதியாக காவல் ஆய்வாளர் வழக்கு விசாரணை முடித்து எதிரிகள் மீது சட்டப்பிரிவுகள் 147, 148, 448, 294(பி), 506(ii) இதசவின் படி 28/02/2014 ம் தேதியன்று குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார். அ.சா.4 காவல் சிறப்பு உதவி ஆய்வாளர் குழந்தைவேலு வழக்கு கோப்பினை பார்வையிட்டு வழக்கின் புலன் விசாரணை குறித்து சாட்சியமளித்துள்ளார்.

8. இத்துடன் அரசுத்தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.

9. அரசுத்தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து எதிரிகளுக்கு பாதகமாக தோன்றும் அம்சங்கள் குறித்து கு.வி.மு.ச பிரிவு 313(1)(ஆ)-ன் படி வினவியபோது எதிரிகள் அதனை மறுத்து பொய்சாட்சியம் என்றார் எதிரிகள் தரப்பில் சாட்சியாக யாரும் விசாரிக்கப்படவில்லை.

**10. விவாதம்**:-

கற்றறிந்த அரசுத்தரப்பு வழக்கறிஞர் இவ்வழக்கில், அரசுத்தரப்பு சாட்சிகள் மூலம் குற்றச்சாட்டு மெய்பிக்கப்பட்டுள்ளதால் எதிரிகளுக்கு தகுந்த தண்டனை அளிக்க வேண்டுமென்று வாதிட்டார்.

எதிரிகள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர், இதனை மறுத்து இவ்வழக்கில் அரசுத்தரப்பில்

RANGESWARI Digitally signed by RANGESWARI Date: 2026.03.23 17:41:03 +0530

எதிரிகள் மீதான குற்றம் சந்தேகத்திற்கிடமின்றி மெய்ப்பிக்கப்படாததால் சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு அளித்து எதிரிகளை விடுதலை செய்யுமாறு வாதிட்டார்.

11. **தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை:-**

இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டியது என்னவெனில் எதிரிகள் மீது அரசுத்தரப்பில் சுமத்தப்பட்ட குற்றமானது விசாரிக்கப்பட்ட சாட்சியம் மற்றும் சான்றாவணங்களின் மூலம் எந்த விதமான சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா என்பதே ஆகும்.

**தீர்வு**

12. இருதரப்பும் கேட்கப்பட்டது. அரசுத்தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களும், சான்றாவணங்கள் மற்றும் வழக்காவணங்கள் நன்கு பரிசீலனை செய்யப்பட்டது.

13. அரசு தரப்பில் கடந்த 20/03/2013 ம் தேதி காலை 09.00 மணிக்கு இவ்வழக்கின் திருமாந்துறை, வெள்ளத்தெரு, காலவாய் கொட்டகையில் அ.சா.1 கருணாநிதி என்பவர் இருந்தபோது, திருமாந்துறையை சேர்ந்த 1 முதல் 5 எதிரிகள் ஒன்று கூடி வீச்சருவாள், கட்டையுடன் அத்துமீறி காலவாய் கொட்டகையில் நுழைந்ததாகவும், அந்த இடத்தைவிட்டு ஓடிபோடா என அசிங்கமாக திட்டியதாகவும், இந்த இடத்தை விட்டு காலி செய்யவில்லை என்றால் உன்னை கொலை செய்து விடுவேன் எனமிரட்டல் விடுத்ததாகவும், எதிரிகள் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

14. வழக்கு சம்பவம் குறித்து அ.சா.1 கருணாநிதி, த/பெ.கணேஷ் கடந்த 21/09/2023 ம் தேதியன்று திருப்பனந்தாள் காவல் நிலைய சிறப்பு உதவி ஆய்வாளர் பட்டியல் சாட்சி-9

RANGESWARI
Digitally signed by RANGESWARI
Date: 2026.03.23 17:41:10 +0530

குழந்தைவேல் என்பவரிடம் புகார் மனுவைப் பெற்று நிலைய குற்ற எண்.304/2013-ல் சட்டப்பிரிவுகள் 147, 148, 448, 294(பி), 506(ii) இதசவின் படி வழக்கு பதிவு செய்து அச்சு முதல் தகவல் அறிக்கை தயார் செய்துள்ளார். மேற்படி அச்சு முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

15. வழக்கு சம்பவம் குறித்து புகார் மனு அளித்துள்ள கருணாநிதி அ.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் தனது சாட்சியத்தில், ஆஜர் எதிரிகளை தெரியும் மற்றும் இறந்துபோன எதிரி கணபதியை தெரியும் என்றும், அனைவரும் தனது ஊரை சேர்ந்தவர்கள் என்றும், சுமார் 13 ஆண்டுகளுக்கு முன்பு தேதி மாதம் ஞாபகம் இல்லை என்றும், 2013-ம் அன்று காலை 9.00 மணியளவில் தான் திருமாந்துறை வெள்ளால தெருவில் தன்னுடைய காலவாய் கொட்டகையில் நின்று கொண்டிருந்தபோது யாரோ தன்னை சத்தம் போட்டுக்கொண்டே பின்னால் இருந்து தள்ளிவிட்டார்கள் என்றும், அதில் தான் கீழே விழுந்துவிட்டதாகவும், தன்னை பின்னால் இருந்து தள்ளியதாலும், தான் எழுந்து திரும்பி பார்ப்பதற்குள் ஓடிவிட்டதால் யார் தள்ளினார்கள், எதற்கு தள்ளினார்கள் என்று தங்களுக்கு தெரியாது என்றும், அது சம்பந்தமாக திருப்பனந்தாள் காவல் நிலையம் சென்றதாகவும், அங்கு போலிசார் எழுதி வைத்திருந்த பேப்பரில் கையெப்பம் மட்டும் பெற்றுக்கொண்டார்கள் என்றும், அதில் என்ன எழுதியிருந்தது என்று தனக்கு தெரியாது என்றும், படித்து பார்க்காமால் கையெழுத்து போட்டதாகவும், தன்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் கையெழுத்து மட்டும் தன்னுடையது என்றும், வழக்கு சம்மந்தமக போலிசார் தன்னை விசாரிக்கவில்லை என்றும், புலன் விசாரணை அதிகாரியிடம் குவிமுச பிரிவு 161ன் படி அளித்த வாக்குமூலத்திற்கு முரணாக சாட்சியம் அளித்ததால், அரசுத்தரப்பில்

RANGESWARI Digitally signed by RANGESWARI Date: 2026.03.23 17:41:16 +0530

குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளார். குறுக்கு விசாரணையிலும் அரசுத்தரப்பு வழக்கிற்கு ஆதரவாக சாட்சியம் எதுவும் அளிக்கவில்லை. புகார் மனுவில் உள்ள கையெழுத்து மட்டும் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

16. வழக்கு சம்பவத்தை கண்ணுற்ற சாட்சியாக அ.சா.2 கருணாநிதி, த/பெ. பன்னீர்செல்வம் விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் தனது சாட்சியத்தில், ஆஜர் எதிரிகளை தெரியும் மற்றும் இறந்துபோன எதிரி கணபதியை தெரியும் என்றும், அனைவரும் தனது பக்கத்து ஊரை சேர்ந்தவர்கள் என்றும், அ.சா.1 ஐ தெரியும் என்றும், அவரும் பக்கத்து ஊரை சேர்ந்தவர் என்றும், இந்த வழக்கு சம்மந்தமாக தனக்கு எதுவும் தெரியாது என்றும், தான் வேறு எந்த சம்பவத்தையும் பார்க்கவில்லை, கேள்விபடவும் இல்லை என்றும், அ.சா.1 எதிரிகள் மீது கொடுத்த புகார் சம்மந்தமாக தனக்கு எதுவும் தெரியாது என்றும். வழக்கு சம்மந்தமக போலிசார் தன்னை விசாரிக்கவில்லை என்றும், புலன் விசாரணை அதிகாரியிடம் குவிமுச பிரிவு 161ன் படி அளித்த வாக்குமூலத்திற்கு முரணாக சாட்சியம் அளித்ததால், அரசுத்தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளார். குறுக்கு விசாரணையிலும் அரசுத்தரப்பு வழக்கிற்கு ஆதரவாக சாட்சியம் எதுவும் அளிக்கவில்லை.

17. வழக்கு சம்பவத்தை கண்ணுற்ற மற்றொரு சாட்சியாக அ.சா.3 செல்வகுமார் விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் தனது சாட்சியத்தில், ஆஜர் எதிரிகளை தெரியும் மற்றும் இறந்துபோன எதிரி கணபதியை தெரியும் என்றும், அனைவரும் தனது ஊரை சேர்ந்தவர்கள் என்றும், அ.சா.1 ஐ தெரியும் என்றும், அவரும் தனது ஊரை சேர்ந்தவர் என்றும், இந்த வழக்கு சம்மந்தமாக தனக்கு எதுவும் தெரியாது என்றும், தான் வேறு எந்த சம்பவத்தையும் பார்க்கவில்லை கேள்விபடவும் இல்லை என்றும், அ.சா.1 எதிரிகள் மீது

RANGESWARI Digitally signed by RANGESWARI Date: 2026.03.23 17:41:22 +0530

கொடுத்த புகார் சம்மந்தமாக தனக்கு எதுவும் தெரியாது என்றும், வழக்கு சம்மந்தமக போலிசார் தன்னை விசாரிக்கவில்லை என்றும், புலன் விசாரணை அதிகாரியிடம் குவிமுச பிரிவு 161 ன் படி அளித்த வாக்குமூலத்திற்கு முரணாக சாட்சியம் அளித்ததால், அரசுத்தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளார். குறுக்கு விசாரணையிலும் அரசுத்தரப்பு வழக்கிற்கு ஆதரவாக சாட்சியம் எதுவும் அளிக்கவில்லை.

18. அ.சா.4 ரிச்சர்ட் செல்வகுமார், காவல் சிறப்பு உதவி ஆய்வாளர், தனது சாட்சியத்தில், தான் தற்போது திருப்பனந்தாள் காவல்நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருவதாகவும், இந்த வழக்கின் புலன் விசாரணை அதிகாரிகளான சிறப்பு உதவி ஆய்வாளர் குழந்தைவேல் மற்றும் காவல் ஆய்வாளர் கணபதி ஆகியோருடன் சேர்ந்து பணிபுரிந்து வந்த சமயத்தில் அவர்களுடைய கையெழுத்து கையொப்பம் எழுத்து நடை தனக்கு நன்கு பரிட்சயம் என்பதாலும். வீண் காலதாமதம் மற்றும் பொருட்செலவை கருத்தில் கொண்டு இந்த வழக்கின் தன்மை கருதி ஆவணங்களின் அடிப்படையில் அவர்களுக்காக சாட்சியம் அளிப்பதாகவும், கடந்த 21.09.2013 ம் தேதி இரவு 10.00 மணிக்கு சிறப்பு உதவி ஆய்வாளர் குழந்தைவேலு நிலைய பொறுப்பில் இருந்தபோது அ.சா.1 கருணாநிதி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று நிலைய குற்ற எண்.304/2013 சட்டப்பிரிவுகள் 147, 148, 448, 294(பி), 506(ii) இதச பிரிவுகளின் படி அச்சு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ததாகவும், பின்பு வழக்கை புலன் விசாரணைக்கு காவல் ஆய்வாளர் கணபதி என்பவரின் பார்வைக்கு வைத்துள்ளார் என்றும், காவல் ஆய்வாளர் கணபதி வழக்கு மேல் புலன் விசாரணைக்கு எடுத்து கொண்டு 22.09.2013 ம் தேதி காலை 07.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் கணேஷ், தனராஜன் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை

RANGESWARI Digitally signed by RANGESWARI Date: 2026.03.23 17:41:27 +0530

பார்வையிட்டு பார்வைமகசர் மற்றும் மாதிரிவரைபடம் தயார் செய்துள்ளார் என்றும், பின்பு பார்வை மகசர் சாட்சிகள் கணேஷ், தனராஜன் ஆகியோரை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், பின்பு சம்பவ சாட்சிகள் கருணாநிதி, பாலகுரு, மணிகண்டன், முருகன், செல்வகுமார் ஆகியோரை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார் என்றும், மேற்படி சாட்சிகள் சம்பவத்தைப்பற்றி தெளிவாகவும் விளக்கமாகவும் என் வாக்குமூலத்தில் உள்ளபடி கூறினார்கள் என்றும் மேற்படி சாட்சிகளின் வாக்குமூலங்களிலிருந்தும், புலன் விசாரணையிலிருந்தும், வழக்கு சம்பவம் உண்மை என்பது தெரிய வந்ததால் எதிரிகளை கைது செய்ய தேடியபோது இந்த வழக்கின் 1 வது எதிரி ஜெயராமன், 2 வது எதிரி கணபதி ஆகிய இருவரையும் 28.09.2013 ம் தேதி மாலை 04.00 மணிக்கு மணலூர் பஸ்டாப் அருகில் நின்றிருந்தவர்களை தக்க காரணம் கூறி கைது செய்து நிலையம் வந்து தக்க வழி காவல் மூலம் நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்துள்ளார் என்றும், இந்த வழக்கின் 4 வது எதிரி கண்ணன் என்பவரை 28.09.2013 ம் தேதி மாலை 07.00 மணிக்கு மணலூர் பஸ்டாப் அருகில் நின்றிருந்தவரை தக்க காரணம் கூறி கைது செய்து நிலையம் வந்து தக்க வழி காவல் மூலம் நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்துள்ளார் என்றும், இந்த வழக்கின் 5 வது எதிரி ரமேஷ் என்பவரை 14.10.2013 ம் தேதி பகல் 12.00 மணிக்கு திருமாந்துறை கோணமதகு அருகே நின்றிருந்தவர்களை தக்க காரணம் கூறி கைது செய்து நிலையம் வந்து தக்க வழி காவல் மூலம் நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்துள்ளார் என்றும், இந்த வழக்கின் 3 வது எதிரி ராஜா என்பவர் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் முன்பிணை பெற்றதால் கைது நடவடிக்கை மேற்கொள்ளபடவில்லை என்றும், இறுதியாக காவல் ஆய்வாளர் வழக்கு விசாரணை முடித்து எதிரிகள் மீது சட்டப்பிரிவுகள் 147, 148, 448, 294(பி), 506(ii) இதச பிரிவுகளின் படி

RANGESWARI Digitally signed by RANGESWARI Date: 2026.03.23 17:41:34 +0530

28.02.2014 அன்று குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளதாகவும் சாட்சியமளித்துள்ளார்.

19. வழக்கு சம்பவத்தில் பாதிக்கப்பட்டதாக சொல்லப்படும் அ.சா.1 புகார்தாரர் கருணாநிதி என்பவர் விசாரணையின் போது அரசுத்தரப்பு வழக்கினை அனுசரித்து சாட்சியம் அளிக்காமல், பிறழ்சாட்சியாக மாறி சாட்சியம் அளித்துள்ள நிலையில், ஆவணங்களை பரிசீலனை செய்ததில், அ.சா.1ம், எதிரிகளும் சமாதானம் செய்து கொண்டு, அ.சா.1 இந்நீதிமன்றத்தில் சமாதான மனு தாக்கல் செய்யப்பட்டது, அது இந்த நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்பது தெரிய வருகிறது. எனவே அ.சா.1-ன் மீது எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை. மேலும் அ.சா.1 அரசுத்தரப்பு வழக்கினை அனுசரித்து சாட்சியம் அளிக்காத நிலையில், புலன் விசாரணை அதிகாரியின் சாட்சியத்தினை மட்டுமே வைத்து எதிரிகளுக்கு எதிரான குற்றச்சாட்டு அரசு தரப்பில் நிரூபிக்கப்பட்டதாக கருத முடியாது. எனவே இவ்வழக்கில் அரசுத்தரப்பில் எதிரிகள் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**20. முடிவாக, இவ்வழக்கில் 1, 3, 4, 5 எதிரிகள் 148, 448, 294(பி), 506(ii) இதசவின் கீழ் குற்றவாளிகள் இல்லை என்று முடிவு செய்து எதிரிகளை கு.வி.மு.சபிரிவு 248(1)-ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது. 2வது எதிரி கணபதி குற்றச்சாட்டு வனைவதற்கு முன்பு இறந்துவிட்டார். எனவே அவருக்கு எதிரான குற்றச்சாட்டு அற்று போய் விட்டது.**

RANGESWARI Digitally signed by RANGESWARI Date: 2026.03.23 17:41:39 +0530

21. எதிரிகள் எழுதிக்கொடுத்துள்ள பிணை பத்திரம் மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு ரத்து செய்ய உத்தரவிடப்படுகிறது.

இந்த தீர்ப்புரை முழுவதும் என்னால் சுருக்கெழுத்து தட்டச்சரிடம் சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு, இன்று 23/03/2026-ம் தேதியில் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

RANGESWARI Digitally signed by RANGESWARI Date: 2026.03.23 17:41:46 +0530

மாவட்டஉரிமையியல்மற்றும்நீதித்துறைநடுவர்,
திருவிடைமருதூர்.(மு.கூ.பொ.)

**அரசுத்தரப்பு சாட்சிகள்;**

| | |
|---|---|
| அ.சா.1 | திரு. கருணாநிதி, த/பெ. கணேசன் (புகார்தாரர்) |
| அ.சா.2 | திரு. கருணாநிதி, த/பெ. பன்னீர்செல்வம் (கண்ணுற்ற சாட்சி) |
| அ.சா.3 | திரு. செல்வகுமார் (கண்ணுற்ற சாட்சி) |
| அ.சா.4 | திரு. ரிச்சர்ட் செல்வகுமார் (காவல் சிறப்பு உதவி ஆய்வாளர்) |

**அரசு தரப்பு சான்றாவணங்கள்;**

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | 21/09/2013 | புகார் மனுவில் உள்ள கையொழுத்து மட்டும் |
| அ.சா.ஆ.2 | 21/09/2013 | புகார் மனு |
| அ.சா.ஆ.3 | 21/09/2013 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.4 | 21/09/2013 | பார்வை மகசர் |
| அ.சா.ஆ.5 | 21/09/2013 | மாதிரி வரைபடம் |

RANGESWARI Digitally signed by RANGESWARI Date: 2026.03.23 17:41:52 +0530

**<u>அரசு தரப்பு சான்று பொருட்கள்;</u>** இல்லை

**<u>எதிரிகள் தரப்பு சாட்சிகள் சான்றாவணங்கள் மற்றும் சான்று பொருட்கள்;</u>** இல்லை

**<u>குறிப்பு;</u>**

1. 1 மற்றும் 2 எதிரிகள் 22/09/2013 ம் தேதி காவலுக்குட்படுத்தப்பட்டு, 1 மற்றும் 2 எதிரிகள் 27/09/2013 ம் தேதியன்று பிணையில் சென்றுள்ளனர்.3 வது எதிரி மாண்பமை மதுரை கிளை சென்னை உயர்நீதிமன்ற கு.ப.ம.எண்.18659/2013 ல் 24/10/2013 ம் தேதியிட்ட உத்தரவின் படி முன் பிணை பெற்று, 31/10/2013 ம் தேதியன்று கும்பகோணம் இரண்டாவது கூடுதல் மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் சரணடைந்து பிணையில் சென்றுள்ளார். 4 வது எதிரி 28/09/2013 ம் தேதியன்று காவலுக்குட்படுத்தப்பட்டு, 04/10/2013 ம் தேதியன்று பிணையில் சென்றுள்ளார். 5 வது எதிரி 14/10/2013 ம் தேதியன்று காவலுக்குட்படுத்தப்பட்டு 22/10/2013 ம் தேதியன்று பிணையில் சென்றுள்ளார்.

2. சாட்சிகள் மூன்று தினங்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.

3. இவ்வழக்கின் தீர்ப்பு சம்பந்தப்பட்ட காவல் நிலையத்திற்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

4. இவ்வழக்கில் வழக்கு சொத்து இல்லை

5. வழக்கின் தீர்ப்பு நகல் மாண்பமை தலைமை நீதித்துறை நடுவர் தஞ்சாவூர் (இருப்பு) கும்பகோணம் அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்பட்டது.

RANGESWARI Digitally signed by RANGESWARI Date: 2026.03.23 17:41:57 +0530

மாவட்டஉரிமையியல்மற்றும்நீதித்துறைநடுவர்,

திருவிடைமருதூர்.(மு.கூ.பொ.)